உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபிஸு தைமீ 1923ஸு ஜனவரிமீ | இதழ் 10 |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்.


"நான் யார்"? ... ... ... 169

தமிழில் மேல்நாட்டுச் சாத்திரச் சொற்கள் ... ... 175

ஞானோற்பத்தி ... ... ... 180

திருக்குராக்குத்தளி ... ... ... 184

சூரியமண்டல வழிபாடு ... ... ... 187

சைவர்கள் வணங்கும் தெய்வம் ... ... ... 190


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.



சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1923.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஞு முதல் 1919ஞு வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது | விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானனந்த சம்பாஷணை | | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 0 |

---

# "சைவம்"

## சந்தா விவரம்

வருடம் ஒன்றுக்கு தபாற் கட்டணம் உட்பட

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இந்தியாவும், சிலோனும் | .... | ... | ரூபா | 1 | 8 | 0 |
| வெளி தேசங்களுக்கு | ... | ... | ,, | 2 | 0 | 0 |
| தனிப்பத்திரிகை | ... | ... | ,, | 0 | 3 | 0 |
| மாதிரிப்பிரதி | ... | ... | ,, | 0 | 3 | 0 |

## விளம்பர விவரம்

| | | | ஒரு மாதத்திற்கு | | | ஒரு வருடத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ... | ரூபா | 5 | 0 | 0 | 35 | 0 | 0 |
| அரை பக்கத்திற்கு | ... | ,, | 3 | 0 | 0 | 25 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு | ... | ,, | 2 | 0 | 0 | 15 | 0 | 0 |

பத்திரிகை வருடந்தோறும் சித்திரைமீ முதல் பங்குனி வரையில் ஒரு புத்தகமாகுமாறு பக்கங்களுக்கு இலக்கமிடப்படுவதனுல், சந்தாதாரர்களுக்கு சித்திரை மாதப்பத்திரிகை முதலாகவே எல்லாப் பத்திரிகைகளும் தரப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 8 | துந்துபி௵ தை௴<br>1923௵ ஜனவரி௴ | இதழ் 10 |
|---|---|---|

## திருவாசகம்

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியும்
குனிப்புடையா னுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

---

## "நான் யார்"?

### ("சித்தாந்தம்")

கடவுள், ஆன்மா, கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை, ஆணவம் என்னும் ஆறும் அநாதி நித்தியப் பொருள்களாம். இவைகளை பதி, பசு, பாசமென்னு மூன்றனுளடக்கிக் கூறுதலே பெருவழக்காம். பசு மூன்றுவகைப்படும். ஈண்டு சகல வர்க்கத்தினுட்பட்ட ஓர் ஆன்மா தன்னையே, "நான் யார்"? என விசாரிக்கப் புகுகின்றான். அவ்விசாரணை எப்பெற்றித்தோ வெனில், நான் முற்றறிவு முதலிய குணங்களையுடைய இறைவனைச் சார்ந்தவனோ, அல்லது அறிவிலாப் பாசத்தைச் சார்ந்தவனோ என்பதாம். சத்தாகிய பதியினைச் சார்ந்தவனாகில் அசத்தாகிய பாசத்தொகுதியுள் கட்டுணான். அசத்தாகிய பாசத்தொகுதிகளைச் சேர்ந்தவனாகில் அறிவிலா ஜடப்பொருளி லொன்றாகிப் போவன். ஆனாலிவன் பாசப்பிணிப்பால் வந்த சிற்றறிவும் சிறுதொழிலும் தனக்குடைமையைக் கருதிப் பேரறிவும் பேராற்றலுமுள்ள ஒருவன் தனக்குத் தலைவனாயிருத்தல் வேண்டுமென, அனுமானித் துணர்

கின்றான். ஆதலினால் பதி, பாசங்களுள்வைத் தெண்ணப்படாமல், ஓர் தனிப்பொருளாய் எண்ணப்படுகின்றான்.

வாக்கிற்கும் மனத்திற்கு மெட்டாத சிவத்தின் முன்னர் உணருருவாகிய அசத்தெல்லாம் பாழாகலின், சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறிதல் செய்யாது. அசத்தாகிய பிரபஞ்சம் ஜடமாகலின் சத்தாகிய சிவத்தையறிதல் செய்யாது. அதுபற்றி இவ்வான்மா ஒழிபளவையால் சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமின்றி நின்றதோர் பொருளெனப் பெற்றாம். ஆகலின், "இருதிறனறிவுள திரண்டலா வான்மா" என்றார் பெரியோர். இதற்கு உரையாசிரியர்கள் சத்து மசத்துமாகிய இரண்டனையு மறியு மறிவு, அறிவிக்கப் படுதலாலும் அறிவித்தாலறியுந் தன்மையாலும் போந்தவறிவு, சத்து அசத்து என்னும் இரண்டன்பாலு முள்ள அநுபவ அறிவு எனப் பொருள் விரித்துக் கூறுவாராயினர். இனி ஆன்மா இரண்டு மின்றித் தனியன்றான் என்பதை மேல்விளக்கிக் காட்டுவாம். அது மாயேயங்களில் ஒன்றாகுமோவென ஐயுறுதல் நீங்க அங்ஙனமாகாமை கூறுவாம்.

1. அவற்றுள் முதற்கண் நிற்பது பஞ்சபூதங்களாம். பஞ்சபூதங்களின் சேர்க்கையாலாவது இம்மானுடயாக்கை. அஃது ஆன்மாவாகுமோவெனில் சுடு சோற்றின்கண் அவ்வாக்கையின் சினையாகிய கையினை வைத்தபோது, சுடுகிறதென்று கையினை எடுத்ததும், பின் ஆறிவிட்டதென அறிந்துண்டு நின்றதும் அவ்வுடம்பல்லவே. அவ்வுடம்புதான் எனக் கூறுவாயாகில் சுடலையின்கண் விறகுந் தானும் பேதமறக்கிடந்து வேம்போது குதித்து ஓடக்காண்கிலமே. காணவில்லையாயினும் பஞ்சபூதங்களி லொன்றாகிய வாயுப்பிரிகையால் அஃதறிந்ததில்லை. அதுவுங் கூடிநிற்கில் அறியுமாற்ற லுடையதாமெனில் உறக்கத்தின்கண்ணே அது (வாயு) கலந்து நின்று நீட்டல் மடக்கல் முதலியன உடலின்மாட்டு நிகழ்த்தவும் அவ்வுடல் அறியாத தென்னே? அங்ஙனம் அறியாததால் இவ்வுடல் அறியுமாற்ற லுடையதன்று. ஆகவே பஞ்சபூதங்களும் அவைகளின் வழித்தாகிய கருவிகள்-25, நாடிகள்-10, ஏடணை-3, ஆக 43-கருவிகளும் அறியுமாற்றலுடையன வல்லவெனக் கூறுக. ஈண்டு நானிவையல்லவென வோர்ந்து தன்னை வேறாகக் காணல்கூடும்.

2. ஐம்பொறிகளும் புலன்களும் ஆன்மாவாகாவோ வெனில், கூறுதும். துவக்கு பரிசத்தையறியும். சட்சுரூபத்தை யறியும். சிங்நுவை இரசத்தை யறியும். செவிசத்தத்தைக் கேட்கும். மூக்குக் கந்தத்தை முகரும். இவைகள் தாம் ஞானேந்திரியங்களும் அவற்றின்

விடயங்களுமாம். ஞானேந்திரியங்களே விடையங்களை ஆகாய முதலிய பூதங்களிடமாக நின்று அறியுமெனில், அவற்றுள் ஒன்றறிந்த தொன்றறியமாட்டாமையானும் ஒன்று மற்றொன்றை யறியாமையானும் இவற்றைச் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று ஒருங்கே யறிவது வேறொன்றுளதாம். ஆதலால் நான் என்பது இந்திரியங்களுமன்று அவற்றின் புலன்களுமன்று என்றுணர்க.

இவ்வாறு உணர்தலால் பொறி-5, புலன்-5, வாக்காதி-5, வசனாதி-5 ஆக இருபது கருவிகளும் நீங்கும். இவற்றுள் ஒன்றுகாமை யுணரவே 63-கருவிகள் நீங்கினவாம்.

3. இவ்விந்திரிய முதலியன நீங்கிய அளவில் ஒன்றிலே பற்றி நினைப்பதும், நிச்சயிப்பதும் எழுந்திருப்பதும் சிந்திப்பதுமா யிருப்பதுவே நானெனில் அவையாகாவெனக் காட்டுவாம். நினைத்தல் முதலிய தொழில்களுக்குக் கருவிகளாயுள்ளன மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பனவாம். இவைகள் தாம் அந்தக்கரணங்க ளென்றழைக்கப் பெறும். இவ்வந்தக் கரணங்கள் நானென நின்று அறியாவோ வெனில் இவையும் ஒன்றறிந்த தொன்றறியாதே இவை நான்கும் நான்காக வறிகின்றமையால் இவைகளைக் கருவிகளாகக் கொண்டு அறிவது வேறொன்றுளதாம். அது அவற்றோடு கூடி இவை தானுயும் இவற்றிற்கு வேறாயும் நிற்பதாம். ஆதலால் நானென நிற்பது இவ்வந்தக் கரணங்களுக்கும் புறம்பாம். ஈண்டு வாக்கு - 4, அந்தக்கரணம் - 4, ஆக எட்டுக் கருவிகளும் நீங்கினவாம் ஆக மொத்தம் 71 - கருவிகள் நீங்கினவாம்.

4. இவ்வந்தக் கரணங்கள் நீங்கிய அளவில் இராசதம், தாமதம், சாத்துவிக மென்னும் மூன்று குணங்களும் நானென நில்லாவோ வெனில், ஒருவனைக் குணவானென்றும் மற்றொருவனைக் குணவறிவீனனென்றும் அவனுக்கு அது குணமென்றும் கூறப்படுதலால் குணங்கள் வேறாக நிற்கக் கண்டாம். ஆகையால் நானென நிற்பது குணங்களல்ல வென வுணர்க.

இனி மேலுமறிய வேண்டுமென்பதோர் ஆசையும் அதன் கண் ஓரறிவும் அதைச் செலுத்துவதுமாகிய ஒரு தொழிலும் நிகழ்கின்றமையால் அவையே நானென நிற்குமெனில், அவை ஒருவன் செய்திகளாய் ஆன்மாவிற் குடம்பாய் அசுத்த மாயையில் தோற்றப்பட்டனவைகளாய் முப்பத்தாறு தத்துவங்களுள் வைத் தெண்ணப் படுவனவாயுள்ளன. ஆதலால் அவைகள் (காலாதிதத்துவங்கள்) நானெனநிற்றல் பொருந்தாமையுணர்க. காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்;

மாயை என்னும் தத்துவங்கள் ஏழனுள், புருடன் என்பது தத்துவத் துள் வைத் தெண்ணப்படுதலால் அது நானென நிற்றற்கு உரியதல்ல வாம். ஈண்டுக் குணம்-3, காலாதி-7. ஆக பத்துக் கருவிகளும் நீங்கு வனவாம். ஆக மொத்தம் 81 கருவிகள் நீங்கினமை காண்க.

5. நானென்பது இவைகளுள் ஒன்று மல்லவென நிற்குங்கால் மீளவும் ஆராயத் தக்கதாய் உன்னச்செய்வதொன் றுறுகின்றது. அது நான் ஆகாதோ வெனில், அவ்வாறு உன்னச் செய்வது சுத்த தத்துவ மாம். சுத்த தத்துவங்க ளறியுமாகில் அவை தம்முள் ஒத்து நில் லாது ஞானமேயாயும், கிரியையேயாயும், கிரியை ஏறி ஞானங்குறைந் தும், ஞானமேறிக் கிரியை குறைந்தும், ஞானமுங் கிரியையு மொத்தும் இவ்வாறு பலதிறப்பட்டு நிற்றலால் இச்சுத்த தத்துவங்களறியா வென் றுணர்க. ஈண்டு வாயு-10, சுத்த தத்துவம்-5. ஆகப் பதினைந்து கருவி கள் நீங்கும். ஆக 96-கருவிகள் நீங்கினமை யறிக.

இதுகாறுங் கூறிய வாற்றால் அகக்கருவிகள் 36-ம் புறக்கருவிகள் 60-ம் ஆக 96-கருவிகளுள் நான் என நிற்கு மான்மா ஒன்றுகாமை யறிக. ஆகவே இருவகை மாயைகளினிடத்து நின்று உற்பவித்த தத் துவ தாத்விகங்களுள் ஒன்றுகாமையால் "சார்மாயை நீயல்லை" என் பது பெற்றும். உச்சுவாசம் நிச்சுவாசம் செய்வதும் மிக மேலானது மான பிராண வாயுவும் நான் அல்லவோவெனில் கூறுதும்.

உயிர், ஆவி, என விதந்தழைக்கப் பெற்றதும் மிக மேன்மை யுடையதுமாகிய இப்பிராணவாயு எல்லாக் கருவிகளுக்கு மிக மேலான தென உபநிடதங்கள் கூறுவதுண்மையே. எங்ஙனமெனிற் கூறுவாம்.

வைகரிவாக்கின் வழிவந்த பேச்சு முதலியன தம்முள் தலைமை கருதி இகலி பிரமனிடத்திற்போய் எங்களுள் யார் தலைமையுற்றவர் என வினவ அவன் "யாருடைய பிரிவினுல் இவ்வுடல் மிக வருந்துமோ அவரே உம்முள் தலைமையுடைய ராவர்" என்றனன்.

முதற்கண் வாக்கு நீங்கிப்போய் ஒரு வருடத்துக்குப் பின் மீண்டு வந்து என்னையன்றி நீவிர் எவ்வாறு ஜீவித்தீர்கள் என்று கேட்க, மூகையர்கள் வாக்கினுற் பேசாமல் உச்சுவாசம் நிச்சுவாசங்கள் செய் தும் கண்ணுல் பார்த்தும் காதால் கேட்டும் நெஞ்சால் நினைத்தும் பிள்ளைகள் பெற்றும் வாழுமாப்போல நாங்கள் வாழ்ந்தனம் என்றனர். இது கேட்டு வாக்குமீண்டுந் தேகத்துளுற்றது.

அதன்பின் கண்ணிந்திரியம் நீங்கிப்போய் ஒருவருடங் கழித்து வந்து என்னையன்றி நீங்கள் எவ்வாறு பிழைத்தீர்களெனக் குருடர்கள்

எவ்வாறு பிழைப்பார்களோ, அவ்வாறு ஜீவித்தோமென்றனர். அது கேட்டு அவ்விந்திரிய முடலிற் போந்தது. பின் சுரோத்திரேந்திரியம் மனம்குறி இவைகளு முறையே நீங்கி மீண்டுவரச் செவிடர் அறிவினர் நபுஞ்சகர் ஜீவித்தாங்கு ஜீவித்தோமென அவைகளும் உடலினைப் பொருந்தி நின்றன. அதன் பின் சிந்துதேசத்தில் மகிமையும் பெருமையும் வாய்ந்த குதிரை தன்னுடைய குளம்புகளைத் தூக்கி நின்று பாய்வதுபோல மேற்கூறிய கருவிகள் எல்லாவற்றையும் ஓரசைப் பசைத்து பிராணவாயு வெளியிற் செல்ல நின்றபோது மற்றைய கருவிகளெல்லாங்கூடி "ஓ மாட்சிமை பொருந்தியவரே" நீர் பிரிந்துபோக வேண்டாம் உம்மையன்றியில் நாங்கள் எவ்வாறு உய்வோம் என்றனர். அது நான் அத்தனை பெருமை யுடையவனுகில் எனக்குக் கீழ்ப்படியுங்க ளென்றது, எல்லாரும் அப்படியே ஆகட்டு மென்று வணங்கி நின்றனர்.

இத்தகைய பெருமை வாய்ந்த அப்பிராணவாயு உறக்கத்தில் கூடிப் பொருந்திக் கலந்து நின்றுயிர்க்கும்போது பாம்பொன்று முகத்திலேறிப்போக ஒன்று மறியாம லிருப்பதேன். போக்குவரத்துள்ள பிராணவாயு கரணங்களுக்கு நாயகமாய் நிற்கில், இராசன் பவனி போம்போது பரிவாரங்களும் உடன் செல்லுமாபோல், பரிவாரம் போன்ற கரணங்கள் தொழிற்படாது அடங்குவானேன். ஆகையால் பிராணவாயு முதலுமல்ல. கரணங்கள் அதன்வழித்துமல்ல. இதுபற்றி பிராணவாயு நானென நிற்பது கூடாதாம். பிராணவாயு நான் அல்லவென உணர்ந்தபின் வேறொன்றுந் தெரியாது நின்ற விடமே சுத்த தத்துவ தூடணம்.

பஞ்சபூதப் பழிப்புமுதல் சுத்ததத்துவ தூடணம் வரை ஐந்து பிரகாரமாக ஆறுறு தத்துவங்களு நீத்தமை யுணர்க. அன்றியும், பிருதுவிதத்துவமுதல் நாதமீறுன முப்பத்தாறு தத்துவங்களைத் தனக்கு வேறுகக் காண்பது.—தத்துவரூபம்.

அவைகள் தன்னு லறியப்பட்ட சடபதார்த்தங்க ளென்று தன்னறிவில் விளங்கக் காண்பது.—தத்துவ தரிசனம்.

அவ்வாறு கண்டுநீங்கித் தான் அன்னியனுய் நிறைவாய் நித்தியமாய் அறிவர்யுள்ள தன்மையை யறிந்து நிற்பது.—தத்துவசுத்தி எனவறிக.

**மண்முதலா நாதாந்த மாய்வந்த தத்துவத்தி**
**னுண்மை யறிந்தெல்லா மொழிந்தாயே—எண்ணிலிவை**
**தத்துவா தீதமெனச சாற்றுங்காண் சைவமறை**
**யத்துவா வெல்லா மற.**

மேற் கூறியாங்கு 36-தத்துவங்களையும் நீத்தபின் ஆணவத்தின் மேலீடு விஞ்சிவரும். அது கேவலமாம். ஈண்டு ஆன்மாவோடு சகசமாய் நின்ற ஆணவம் ஒன்றி நிற்க, அதில் ஆன்மா பதிந்து இருளின்கண் விழித்த விழிபோல நிற்கும். எல்லாக் கருவிகளுங் கழன்ற பின்னும் இவ்வாணவம் கழலாமல் நின்ற தன்மை என்னேவெனில்,— இருடான்,

விடிகைக் கிருண்ட மிகுதிபோன் மாக
மடிகைக் கிருண்டதுகாண் மற்று.

இவ்வாணவத்திற்கு விகற்ப முதலான எண்குணமும் அதனையடுத்து வருங் கன்மத்துக்கு இருத்தல் முதலான ஆறுகுணமும் அதனையடுத்து வரும் மாயைக்கு அஞ்ஞான முதலிய எழுகுணமும் உள்ளனவாம்; யாவும் ஆணவ சம்பந்தமாயே யிருக்கும்.

இவ்வாணவம் சிவஞானம் விஞ்சினரை விட்டு நீங்கும் சத்தியையுடையதாய், இருளினு மிருண்டிருப்பதாய், அறிவை மயக்குவதாய், இத்தன்மையதென்று ஒருவராலுங் காணமுடியாததாய், ஆன்மாவின் குணம் போலிருக்கும். அஃது இன்றளவும் (36-தத்துவங்கள் நீங்கியவழியும்) நிற்பது பொருந்துமோ என்று அறிவது கேவலதரிசனம். இதுவோ மலம் என்று பார்த்தல் கேவலா தீதம். இருளாகிய இவ்வாணவ மலத்தை இருள் என்று அறிந்ததினால் இருளைப் பிரிந்து நின்ற நிலைபெற்றும். அவ்வறியாமை முன்போலே மறைத்து நின்றால் அவ்விருளாகிய ஆணவத்தை நீ காணமுடியாது பெத்த நிலையிலிருந்தது போலிருத்தல் கூடும்.

அந்த மலமா மறியாமை கண்டாயே
யந்த வறிவுநீ யையனே—தொந்தவிருள்
போனதே யுன்னைவிடப் போக்கித் திரோதையரு
ளானதே கண்டா யறி.

மலநீங்கித் தானறியு முறைமையும், தன்னறிவிற் கறிவாய் நிற்கு மிறைவனது ஞானம் உபகரிக்கு முறைமையும் தன்னறிவிலே விளங்கக் காண்பது ஆன்மபோதம். கண்ணிலிருள் போனால் கண் தன்னைக் காணதவாறுபோல ஆன்மாவை யறியவொண்ணாதோ வெனில், நீ கண்போற் சடமல்லை, நீ காட்டியதைக் கண்டுணர்ந்த வொண் போதமாக உணர்க.

நான் கருத்தாவல்லனோ வெனில், உனக்கு அயர்ச்சி யுண்டாகி நின்ற தன்மையாலும், கருவிகள் உனக்கு வசப்பட்டு நில்லாததாலும்,

புண்ணிய பாவம் உன்னை வந்து பொருந்தி நீ இன்ப துன்பங்களை யநுபவிப்பதாலும் உன்னையுங் கன்மத்தையுங் கூட்டுவிப்பதற்கு ஒருவன் வேண்டிய திருப்பதினாலும், உள்ளும் புறம்பு நின்று கருவி கரணங்களை வினைக்கீடாக நடத்துதற்கு ஒருபொருள் வேண்டப்படுதலானும், நீ கருத்தாவன்று. உன்னை உன்னாலறிய முடியவில்லை, அறிவித்தாலறிகின்றனை. ஆகையால் உனக்கு அறிவித்தற்கு வேறொருவன் வேண்டும். அவனே கருத்தாவாம். ஆகையால் நீ " தற்பரமுமில்லை." இதுகாறுங் கூறியவாற்றால் தர்ப்பணம்போற் காட்டுஞ்சார்மாயையல்லை ; தற்பரமுமல்லை என்பது பெற்றாம். பின்னை நான் யாரெனில்,

1. இரண்டு மிலாத் தனியன்
2. பாசவறிவும் பதியறிவுமின்றியே, யாசறவேநின்ற வனீயாம்
3. " நீசத்தசத்தன்று நேரேசதசத்தன் " என்பன விடைகளாக வறிந்து கொள்க.

இதுகாறுங் கூறியவைகளையும் மேலுள்ள நிலைகளையுமடக்கி

வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய்
நான்கெட் டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

என திருவாசகங் கூறுவதை யறிந்துகொள்க.

ஆன்மா தனியனென்பதற்கும் சதசத்தனென்பதற்கும்

**திருவாசகம்**

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே.

S. பால்வண்ண முதலியார், திருநெல்வேலி.

# தமிழில் மேல்நாட்டுச் சாத்திரச் சொற்கள்

இப்போது நம் கல்லூரிகளில் மேல்நாட்டுப் பூத சாத்திரங்களை நம் நாட்டு மொழியிலேயே நமது சிறுவர்கட்குக் கற்பிக்க வேண்டு மென்று சில காலமாகப் பல அறிஞர் பாடுபடுகின்றனர். அங்ஙனம் கற்பிப்பதால், நம் சிறுவர் முதலில் மேல்நாட்டு மொழியின் அறிவு பெறுவதற்காகச் செலவழிக்கப்படும் நீண்ட காலம் வீணாகாமல் அவர் கட்குச் சாத்திரப் பயிற்சியிலேயே பெரிதும் பயன்படும்.

அங்ஙனம் மேல்நாட்டுக் கலைகளைக் கற்பிப்பதற்கு நம் நாட்டு மொழியில் வேண்டிய சொற்கள் இல்லையென்று சிலர் வாதஞ் செய்கின் றனர். அவ்வாதம் சரியென்று நமக்குத் தோன்றவில்லை. சில மொழி களிற்போலல்லாமல் தமிழில் ஒவ்வொரு பொருட்கும் ஒவ்வொரு கருத்தமைந்த எத்தனையோ சொற்கள் குவிந்து கிடக்கின்றன. எவ் வகைக் கருத்தையும் உள்ளபடி தெரிவிக்கவல்ல சொற்கூட்டங்கள் கற்றுத் தேர்ந்த புலவர்கள் வாயினருகில் காத்துக்கொண்டு கிடக்கும்.

ஆனால், மேல்நாட்டுச் சாத்திரச் சொற்களுக்கெல்லாம் அதே கருத்தமைந்த சொற்கள் தமிழிலுண்டா என்று கேட்கலாம். தமிழி லுள்ள சொற்களுக்கெல்லாம் அதே கருத்தமைந்த சொற்கள் அம் மொழியிலுண்டா என்று நாம் அவர்களைத் திருப்பிக் கேட்போம். ஒரு நாட்டில் வழக்கிலில்லாத பொருட்கள் பிறநாட்டினின்று வந்து புகுதல் கூடும், அத்தகைய பொருட்களைத் தெரிவிக்கும் சொற்கள் எம்மொழியிலும் எப்படியிருத்தல் கூடும்? ஒரு மொழியில் வழக்கிலில் லாத பொருட்களை எடுத்தாள வேண்டி வந்தால் அம்மொழியில் புதிய சொற்களை ஆக்கிக்கொள்ளல் வேண்டும். அதுதான் உலக வழக்கு. 'சைக்கிள்' (Cycle) என்பது **துவிசக்கர வண்டி** யென்றும், 'மோட் டார்கார்' (Motorcar) என்பது **தற்போக்கு வண்டி** யென்றும், 'எலெக்டரிஸிடி' (Electricity) என்பது **மின்சார சத்தி** யென்றும், 'ஸப்மரைன்' (Submarine) என்பது **கீழ்நீர்க் கப்பல்** என்றும் இன் னோரன்ன பலபெயர்கள் நம் நாட்டில் இப்போது வழங்கப்படுகின்றன. அவைகளெல்லாம் நம்மவர் இப்போது ஆக்கிக்கொண்ட சொற்களே யன்றி வேறன்று. மேல் நாட்டிலே புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப் படும் பொருட்களுக்கெல்லாம் புதிது புதிதாகத்தானே சொற்கள் அமைக்கப்படுகின்றன. ஆதலின், எப்பொருளையும் எக்கருத்தையும் தெரிவிப்பதற்கு புதிதாகச் சொற்களமைக்கும் ஆற்றல் நம் நாட்டுப் புலவர்களுக்கு உண்டு. இக்கருத்துப் பற்றியே தமிழுக்கென்று சாத்தி

ர்க் குழூஉக்குறிச் சொற்களை நிச்சயிக்க, சேலத்தில் " டமில் ஸயன்டிபிக் டெர்ம்ஸ் ஸொஸைடி " (Tamil Scientific Terms Society) என்ற **தமிழ்ச் சாத்திரப் பரிபாடைச் சங்கம்** ஒன்று இப்போது ஏற்பட்டிருப்பது கேட்கப் பெரிதும் களிப்படைகின்றேம். அவர்கள் தொடங்கியிருக்கும் வேலை நம் நாட்டிற்குப் பெரிதும் நன்மை பயக்கக் கூடியதே.

அச்சங்கத்தார் பெரிதும் கவனிக்கும்படி நாம் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்ளுகின்றோம். மேல்நாட்டுச் சாத்திரச் சொற்களுக்குத் தகுந்த சொற்களை நிச்சயிக்கத் தொடங்கிய அவர்கள், அச்சொற்களெல்லாம் கூடியவரையில் தமிழாகவே யிருக்கப் பார்க்கவேண்டும். வடமொழியில் வல்ல சிலர் தமிழ்ப் புலமையின்மையினுலே தமிழில் எளிதிற் கிடைக்கும் சொற்களையும் எடுத்தாளத் தெரியாமல் வட சொற்களையே வலிந்திழுத்துப் புணர்த்துவது இக்காலத்தில் வழக்கமாயிருக்கின்றது. ஆதலின், மேல் நாட்டு மொழியிலும் நம் நாட்டு தேர்ச்சி பெற்றவர்களே இவ்வேலை செய்தற்குரியவர்கள். இவ்விரு மொழிகளோடு வடமொழியும் வல்லவர்களும் இதற்குத் துணையாயிருத்தல் வேண்டும். இது அரிய பெரிய வேலையாதலின், அப்படிப்பட்ட பேரறிவு படைத்தவர்களையே அச்சங்கம் அங்கமாகப் பெற்றிருக்குமென்று நம்புகின்றேம்.

அச்சங்கத்திலிருந்து மாதப்பத்திரிகை ஒன்று வெளியாகிறது. அதில் சாத்திரச் சொற்கள் சம்பந்தமான பல வியாசங்கள் பல அறிஞர்களால் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்படுகின்றன. அச் சங்கம் செய்யும் வேலையை அப்பத்திரிகை நன்ருக எடுத்துக் காட்டுகிறது. அப்பத்திரிகைக்குத் தமிழில் ஒரு பெயரில்லாதிருப்பது ஓர் குறையாகும். தேச நன்மைக்கென்றெழுந்த அப்பத்திரிகையை ஆதரிக்க நம் நாட்டினர் யாவரும் கடமைப்பட்டவர்களே.

நவம்பர் மாதம் வெளிவந்த அப்பத்திரிகையில் ஒரு நண்பர், தமிழில் சாத்திரப் பரிபாடையைப்பற்றி நன்ருக எழுதுகின்ருர். ஆனல்,

> " ப்ரதிபதங்கள் :—ஸ்ரீ காசி நாகரிப்ரசாரிணி சபையார் போட்டிருக்கும் சாஸ்த்ர அகராதியிலுள்ள ஸம்ஸ்க்ருத பதங்கள் அப்

---

பதிபுண்ணியத்துள் தலையாயது சமய பரிபாலனம். சமய பரிபாலனத்திற்குப் பத்திரிகை இன்றியமையாதது. தமிழ் நாட்டில் அருமையாக வெளிவரும் சைவப்பத்திரிகை இது ஒன்றே.

> படியே தேசபாஷைகள் எனைத்திலும் வழங்கவேண்டுமென்பது என்னுடைய கொள்கை"

என்று அவர் கூறுகின்றார். இக்கொள்கை சிறந்ததென்று நமக்குத் தோற்றவில்லை. இக்கொள்கைக்கும், ஆங்கிலச் சொற்களை அப்படியே எம்மொழியிலும் அமைக்கவேண்டுமென்று அரற்றும் சில பெரியோர் கொள்கைக்கும் வேற்றுமை அதிகமிராதென்பது எமது கொள்கை. நிற்க.

மேற்படி பத்திரிகையில், தமிழில் சாத்திரப் பரிபாடைகளை நிச்சயிக்கும் வகையில் மற்றொரு நண்பர், நம் தேச மொழிகளில் ஆங்கிலச் சொற்களை அப்படியே அமைத்துவிடவேண்டும் என்று கூறும் அழகைப் பார்ப்போம். அந்நண்பர் எழுதிய வியாசம் ஆங்கிலத்திலன்றித் தமிழில் எழுதப்பட்டிருக்குமானால் ஆங்கிலம் தெரியாத தமிழ் மக்கட்கெல்லாம் அவர் கருத்து நன்றாகத் தெரியக்கூடியதாயிருக்கும். ஆங்கில அறிவும் தமிழறிவும் ஒருங்கு படைத்தவர்கள் தானே இவ்வேலையில் புகுதல்வேண்டும். அப்படியிருந்தால் தமிழில் நூலெழுதவேண்டிய முறையைப்பற்றி அவர் ஆங்கிலத்தில் எழுதுவானேன். அவர் தமிழறிவின்றி ஆங்கில அறிவுமட்டும் படைத்தவராயிருந்தால் அவரது யோசனை நமக்குப் பயன்படாதென்று தள்ளிவிடுதல்வேண்டும். ஆயினும் அவர் கூறுவதைக் கவனிப்போம்.

இந்நாட்டில் பல்வேறு வகைப்பட்ட மொழிகள் பேசப்படுகின்றபடியினாலே தேச மொழிகளில் ஆங்கிலச் சொற்களை அப்படியே அமைத்துவிடுவது எளிதாயிருக்குமென்கின்றார். ஒவ்வொரு மொழியிலும் சாத்திரச் சொற்கள் அமைப்பது வருத்தமென்கின்றார். ஆங்கிலச்சொற்கள் அளவு கடந்திருப்பதால் அவ்வளவிற்கும் தேச மொழியில் சொற்கள் தேடுவது முடியாத காரியமென்கின்றார். உயர்தரக் கல்வியெல்லாம் ஆங்கிலத்தில் கற்கவேண்டியிருப்பதால் கற்பவர்க்கு அது எளிதில் பயன் விளைக்குமென்கின்றார்.

நம் தேயமொழியில் இவர்க்குள்ள பற்றே பற்று! ஆங்கிலச் சொற்களைக் கலந்து தமிழின் அழகைக் குலைத்து அதனைக் குட்டிச்சுவராக்க நினைக்கின்றார்போலும்! இது தமிழர்களுக்கு எவ்வளவு அரு

---

சிறிதளவாயினும் சைவாபிமானமுள்ள சிவபக்தர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் $1\frac{1}{2}$-ரூபா கொடுத்து வருடம் ஒன்றுக்கு 36-பாரமாக வெளிவரும் இப்பத்திரிகை வாங்குவதனால் உங்கள் செல்வம் குறைந்து போகாது. வீணில் செலவிடப்பட்டதுமாகாது. அதனால் உலகில் சைவம் தழைக்கும். உங்களுக்குப் புண்ணியமுமுண்டாகும்.

வருப்பையும் வருத்தத்தையும் விளக்குமென்பதை இவர் அறியாமற் போனது வியப்பு! ஆங்கிலத்தில் மட்டும் அறிவுபடைத்தவர்கட்கு, தேசமொழியில் சாத்திரச் சொற்களை யமைப்பது வருத்தமாகத்தா னிருக்கும். இருமொழியிலும் அறிவுபடைத்தவர்கட்கோ அது எளி தாகவே முடியும். அன்றியும் வருத்தப்படாமல் உலகில் எக்காரியந் தான் கைகூடும்? ஆங்கிலத்தில் எவ்வளவு சொற்களிருந்தாலும் அவ் வளவுக்கும் தமிழ்ச்சொற்கள் புலமை நிரம்பியவரிடத்துக் கிடைக்கும் என்பதை முன்னரே விளக்கியிருக்கின்றோம். உயர்தரக் கல்வியை ஆங்கிலத்தில் கற்பவர்களுக்கு, தமிழில் இவர் அமைக்க நினைக்கும் ஆங்கிலச் சொற்கள் எத்துணை நன்மை பயக்குமோ நமக்குத் தெரிய வில்லை. மேல்நாட்டுக் கலைகளைத் தேசமொழியிலேயே கற்பிக்க வேண்டுமென்பதை இவர் மறந்துவிடுகின்றார்போலும்! மேலும், மேல் நாட்டுச் சாத்திரச் சொற்கள் அவற்றின் கருத்தை மனதில் நன்கு பதியவைக்கின்றது என்கின்றார். அச்சொற்களுக்கு அவ்வாற்றல் எப்படி வந்தது? பன்முறையும் எடுத்தாண்ட பழக்கத்தினாலன்றோ? அத்தகைய பழக்கத்தால் தமிழ்ச்சொற்கள் அவ்வாற்றலை யடைதற்கு என்ன தடை?

இவர் கருத்துக்குத் திருத்தம் கொண்டுவந்திருக்கும் இன்னொரு நண்பரையும் இச்சமயம் மறக்கமுடியவில்லை. தமிழில் ஆங்கிலச்சொற் களை யமைப்பதற்கு ஒலி வேறுபாடமைய, தமிழெழுத்துக்களையே சில குறி வேறுபாடமையத் திருத்தவேண்டுமென்று அந்நண்பர் திருவாய் மலர்ந்தருள்கின்றார். அழகழகு! சாலவழகு! தமிழெழுத்துக்கள் ஏற்பட்ட காலத்தில் இத்தகைய பேரறிவுபடைத்த பெரியோர்கள் இல் லாமற்போனதுபற்றி வருத்தமடைகின்றேம். தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் வேறு பகைவரும் வேண்டுமோ? இவ்வரிய பெரிய கருத்துக்களையெல்லாம் ஏற்கெனவே சில அறிஞர்கள் மறுத்திருக்கின் றார்களாதலின், இதுபற்றி யிப்போது நாம் அதிகம் பேசவேண்டுவ தில்லை.

மறுபடியும் நாம் அச்சங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதென்ன வென்றால், நம் தமிழ்மொழிக்குத் தீங்கு பயக்கும் இச்சிறிய கொள்கை

---

**கிறிஸ்தவர்கள் அளவிறந்த பேர் அளவிறந்த உபாயங்களால் அளவிறந்த பொருளைக்கொண்டு கிறிஸ்து சமய பரிபாலனம் செய்கிறார்கள். இவ்வொரு சைவப்பத்திரிகையை நடத்துவிக்க இதுவரையில் எந்தச் சைவாபிமானியும் முன் வரவில்லை. நாம் கடன்பட்டும் இதை வெளியிடுகின்றோம். ஐய்யோ தெய்வமே, உன் வேதநெறியும் சைவநெறியும் இப்படியும் அழியுமா! (ப - ர்.)**

களையெல்லாம் ஒதுக்கி, ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலும் பேரறிவுபடைத்த பெரியோர்களைக்கொண்டு, மேல்நாட்டுச் சாத்திரச் சொற்களுக்கு, கூடியவரையில் தமிழ்ச் சொற்களையே தேடல்வேண்டும். சில சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்கள் எளிதில் கிடைப்பது அரிதாகி, அச்சொற்களின் கருத்தை நன்றாகத் தெரிவிப்பதும், தமிழில் வந்து வழங்குவதுமான வடசொற்கள் இருந்தால் அவற்றையும் சேர்த்துக்கொள்ளல்வேண்டும். தமிழில் வந்து வழங்காத புதிய வடசொற்களைச் சேர்த்தலினும், தமிழிலேயே ஆக்கச் சொற்களை யமைத்துக்கொள்வது பல்வகையானும் நன்மை பயக்கும்.

**"கலைமகள்" ப - ர்.**

---

## * ஞானோற்பத்தி

### (இந்து சாதனப்பிரசுரம்)

ஞானமாவது மாயை காரணமாகத் தோன்றுவதொரு பொருளன்று. அது மாயாவரைப்பினுக்கு அப்பாற்பட்டது. மாயாமயக்கத்தில் நின்று சீவர்களை எடுத்து இறைவனுடைய திருவடிக்கீழ் வைப்பதே ஞானம் எனப்படும். இந்த ஞானத்தை மாயாவரைப்பினுட்பட்ட எமது சிற்றறிவு கொண்டு இனைத்தென்று எடுத்துச் சொல்வதுதானும் கூடாது. ஞான குருவாகிய தக்ஷிணாமூர்த்திக் கடவுளும் "இருந்துகாட்டிச் சொல்லாமற் சொன்னார்" என்று சாத்திரங்கள் எடுத்துக் கூறும். இதனை ஒருவாறு எடுத்துச் சுருக்கத்தினும் சுருக்கமுறச் சொல்ல வேண்டுவதுண்டானால் "உண்மை அனுபவம்" என்று சொல்லலாம். "உண்மை" யாவது பதிப்பொருளாகிய ஒன்றுமாத்திரமேயாம். மற்றெல்லா உண்மைப் பொருள்களும் பதிப்பொருளாகிய உண்மைப் பொருள் ஒன்றிலே அடங்கும். அந்தப் பதிப்பொருளாகிய உண்மையை அனுபவித்தற்கேதுவாயுள்ளதே ஞானம் எனப்படும். இந்த ஞானத்துக்கு உற்பத்தி எங்கே என்பதை இங்கே ஆராய்வோம்.

ஞானத்தைச் சிலர் அறிவு என்று மயங்குவர். அறிவும் ஞானமும் தம்முண் மிகப் பேதப்படும். அறிவு மாயை காரணமாகத் தோன்றும் பொறி புலன் கரணங்கள் வாயிலாக உண்டாவது. ஞானம் கடவுளுடைய திருவருள் காரணமாகத் தோன்றுவது. அறிவு, பொறி

---

***இந்த வியாசம் ஒன்றே கோடி பொன் பெறும். 1½-ரூபா கொடுத்து இப்பத்திரிகையை வாங்க நம்மவர்கள் பின்னிடுவதேன்!**

புலன்கள் வாயிலாகத் தோன்றும் காட்சி கேள்விகளால் ஆவது. ஞானம் அனுபவ உணர்ச்சி வாயிலாக எய்துவது. வெல்லம் தித்திக்கும் என்று கேள்வி மாத்திரையால் அறிவதற்கும், அதனை நாவிலிட்டு மென்று சுவைத்து அனுபவ வாயிலாக உணர்வதற்கும் பெரிதும் பேதமுண்டு. இந்த வெல்லந்தானும் மாயைப் பொருள்களுள் ஒன்று. ஆகவே இதன் சுவையை உணர்ச்சி மாத்திரையால் உணரும் அனுபவந் தானும் மாயைக்கட்படுவதொரு அனுபவமேயாகும். பதிப்பொருள் இந்த மாயை வரைப்புகள் அனைத்தையுங் கடந்து அப்பாலுக்கப்பாலாயுள்ள பொருள். அதுவே உண்மையான உண்மைப்பொருள். இந்த உண்மைப் பொருளை அனுபவித்தற்கேதுவான கருவியே ஞானம் எனப்படும். அறிவு ஞானத்துக்குத் தடை என்பதும் சிலர் கருத்து. "கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்" என்பது இக்கருத்துப் பற்றியேயாம்.

பதிப்பொருளாகிய உண்மைப் பொருளை அனுபவிக்குமா றெங்ஙனம் என்பதை நாம் ஆராய்வாமெனில், அந்தப் பொருள் சச்சிதானந்த வடிவாயுள்ளதென்பதும், ஆன்மாக்களாகிய நாமெல்லாம் படிகத்தின் தன்மை படைத்துளேம் என்பதும், சச்சிதானந்த வடிவாகிய அந்த உண்மைப் பொருளின் சொரூபம் நம்பாற் பிரதி பலித்தலே நாம் அதனை அனுபவிக்கும் முறையாம் என்பதும் இனிது புலப்படும். அந்தப் பொருளுடைய சச்சிதானந்த வடிவமே அதன் அருள் எனப்படுவது. அந்த அருள் யாதொரு தடைப்பாடின்றி நம்பாற் பிரதி பலிக்குமிடத்து, நாம் அதன் தன்மையைக் கிரகித்து அந்த மயம் படைத்து அதனை அனுபவித்தற் குரியராவேம். அந்த அருளே ஞானம். இது பற்றியே "ஞானந்தா னுருவாகிய நாயக னியல்பை" என்று ஆன்றோரும் எடுத்து மொழிவர். அந்த அருளே கடவுளுடைய வடிவமாம். "உருவருள் குணங்களோடு முணர்வருள்" என்பது இவ்வுண்மையை வலியுறுத்தும். இந்த ஞானத்தைக் கொண்டே நாம் அவரை அறிதலும் அனுபவித்தலுமாம். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றார் ஆப்தர்.

அந்தப் பதிப்பொருள் விருப்பு வெறுப்பின்றி அன்பே வடிவாய் ஆனந்த சொரூபமாய் சகல கேவலங்களின்றித் தானே தானய்த் தனி முதலாய் விளங்கிக்கொண்டிருக்கும். இந்த விளக்கமே அதன் ஞான

---

**இப்பத்திரிகைக்குப் போதுமான வருவாயில்லாமையால் இவ்வருடம் இரு முறை இவ்விரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு பத்திரிகை வெளியிட நேர்ந்தமைக்கு வருந்துகின்றேம். (ப - ர்)**

சொரூபம். இந்தச் சொரூபம் நம்பாற் செறியப்பெற்று நாம் அந்தப் பதிப்பொருளோடு ஈடுபட்டு அத்துவித சம்பந்தமுற்று அதன் பெரு நலத்தை அனுபவத்திற் காணும் காட்சியே ஞானக் காட்சி என்று சொல்லத் தக்கது. இதனை நாம் எமது புல்லிய ஆற்றல் கொண்டு விளங்குவது ஒரு காலத்தும் கூடாது. இது பற்றியே இதனை மௌன நிலையென்று ஆன்றோர் எடுத்துச் சொல்வது.

இந்த ஞானத்தாலன்றி வீடுபேறெய்துவது கூடாது. "உரை செயிற் பரமஞானம் ஒன்றுமே முத்திக்கேது" என்று சாத்திரங்கள் வற்புறுத்தும். சரியை கிரியை யோகங்கள் எல்லாம் இந்த ஞானத் துக்குச் சோபான மார்க்கங்களாம். "விரும்புஞ்சரியை முதன் மெய்ஞ் ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனிபோ லன்றோ" என்றார் தாயு மானர்.

இந்த ஞானத்தை எமக்குப் படிமுறையாகப் பிரசாதித்தருள வேண்டியன்றே, மாயாவரைப்பினுக்குரிய நாம ரூபங்கள் அனைத்தை யும் கடந்து அப்பாலுக்கப்பாலாயுள்ள பரம்பொருள், அந்த வரைப்பி னுட் படிந்து சகளீகரித்து நாமரூபங்களைத் தாமும் வகித்து, எமக்கும் நாமரூபங்களைத் தருதற்கேதுவாகத் தனுகரண புவனபோகங்களை எல் லாம் ஆக்கி நிறுத்தி அழித்து திரோபவித்து அனுக்கிரகித்துப் பஞ்ச கிருத்தியங்களைப் புரிவாராயினர். அதாவது, இந்தப் பஞ்சகிருத்தி யம் அனைத்தும் எமக்குத் தமது ஞான சொரூபமாகிய உண்மை நிலை யைக் காட்டுதற் பொருட்டேயாம் என்றபடி. கடவுள் எமக்கருளிய தனு கரணாதிகளைத் துணைக்கொண்டு, அவர் எம்பொருட்டு வகித்தருளிய நாமரூபங்கள் வாயிலாக நாம் அவருடைய உண்மைச் சொரூபத்தைக் காணுதல் வேண்டும். அவர் எம்பொருட்டு வகித்தருளிய நாமரூபங் கள் எல்லாம் அவருடைய உண்மைச் சொரூபத்தைக் காணுதற்கு வேண்டப்படும் இன்றியமையாத வாயில்களாம். அவர் தாமாக நம் பொருட்டு வகித்தருளிய நாமரூபங்களால் பெறப்படுந் திருவருட் பேறு எமக்கு ஏனைய நாமரூபங்களால் ஒருபோதும் வாய்த்திடமாட் டாது. அந்த நாமரூபங்கள் அவருடைய உண்மைச் சொரூபத்தை எமக்குத் தெளிவுற விளக்குதற்குரிய சாதனங்களா யிருத்தன் மாத் திரையின் அமையாது, இந்த மாயாவரைப்பிலே அனுபவித்தற்குரிய

---

பதினுயிரம் சந்தாதாரர்களிருந்தால் இதை 4 பாரமாக அச்சிடலாம். சந்தாத் தொகையை ஒரு ரூபாவாகக் குறைத்துவிடலாம். இன்னும் பல வழிகளில் சைவ சமய பரிபாலனம் செய்யலாம். திருநீறிடுவார் ஒவ்வொருவரையும் சந்தாதாரர்க ளாக்கி உதவிபுரியுமாறு சிவபக்த சிகாமணிகளை வேண்டுகின்றோம். (ப - ர்.)

பூரண அருளை நாம் பெறுதற்கும் அவைகளே வாயில்களாம். அந்தப் பூரண அருளை நாம் அனுபவியாமல், அதுகொண்டு காணத் தக்க பதி சொரூபமாகிய ஞான நிலையை நாம் காண்பது ஒருவாற்றானும் கூடாது. மாயா வரைப்பிலே கடவுள் கொண்டருளிய உண்மை வடிவத்தைக் காணாத ஒருவன், அந்த மாயைக்கு அப்பாலுள்ள அவருடைய உண்மைச் சொரூபத்தைக் காணவல்லனவன் என்பது எழுத்தைப் பிழையறக் கல்லாதான் ஒருவன் காவிய பண்டிதனானன் என்பது போலும் ஓர் ஆபாசமாம். அல்லாமலும் கடவுள் எமக்கு உண்மையை உணர்த்தற்காகச் சிருட்டித்த இந்தப் பிரபஞ்சத்தில் உண்மையைக் காணாத ஒருவன் இந்தப் பிரபஞ்சத்தைக் கடந்துள்ள உண்மையைக் கண்டு அதனை அனுபவிக்க வல்லவனாவன் என்பது ஒருவாற்றானும் பொருந்தாது. இது பற்றியே எமது சமயம் தத்துவ தரிசனம் முதலிய தச காரியங்களை எமக்கு முத்தி சாதனங்களாக விதித்தது.

மக்கள் எல்லாம் தத்தமது தகுதிக்கேற்ப ஓர் ஓர் சமயத்தை அனுசரித்து ஓர் ஓர் கடவுளை வணங்கி வழிபடுமிடத்து, முழுமுதற் கடவுளாய பரம்பொருள் அந்த அந்தக் கடவுளரை அதிட்டித்து நின்று அவர்களுக்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ப அருள் புரிவாராயினும், அந்த அருள், அவர் கொண்டருளிய உண்மைவடிவாற் பெறப்படும் அருளைப்போலச் சிறந்திடமாட்டாது. உண்மைப் பொருளாற் பெறப்படும் பயன் போலிப் பொருளால் ஒருபோதும் வாய்த்திடமாட்டாது. கடவுள் கொண்டருளிய தடத்த வடிவங்கள் தாமும் அவருடைய சொரூபத்தின் வேறாகுமாயினும், அந்தத் தடித்த வடிவங்களுக்கும், நாம் ஆரோபம்பற்றிக் கற்பித்துக்கொள்ளும் போலி வடிவங்களுக்கும் பெரும் பேதமுண்டாம். அவருடைய உண்மைத் தடத்த வடிவங்களாற் பெறப்படும் பயன், போலிக் கற்பித வடிவங்களாற் பெறப்படும் என்று கொள்வது அவர் கொண்ட அந்தத் தடத்த வடிவங்களின் பெருமையையும் அவருடைய அருட்டிறத்தையும் அவமதித்து நிந்தித்தவாறாகுமன்றி மற்றன்றாம். கடவுள் தாம் கொண்டருளிய உண்மை வடிவங்கள் வாயிலாகவும், நாம் எமது அறியாமை பற்றிக் கற்பித்துக்கொள்ளும் போலி வடிவங்கள் வாயிலாகவும் சம அளவினதாகிய அருளையே பாலிப்பர் என்றால், அவர் கொண்டருளிய அருள்வடிவம் அப்பிரயோசனமுற்று குற்றத்தின்பாற் பட்டிடும். அல்லாமலும், உண்மை வடிவாற் பெறப்படும் உண்மை, போலி வடிவாற் பெறப்படும் என்பது உண்மைக்கு மறுதலையாகும் என்பதையும் நாம் எமது சித்தத்தில் அழுத்துதல் வேண்டும்.

ஆகவே; உண்மை ஞானம் உண்மைச் சமயத்தில் நின்று, கடவுள் உண்மையாகக்கொண்ட உண்மைவடிவங்கள் வாயிலாகப் பெறப் படத்தக்கதன்றி எல்லாச் சமயத்தாலும் எல்லாவடிவங்களாலும் பெறத் தக்கதன்றென்பது போந்தபடி காண்க. பிற சமயங்களில் நிற்பார்க்கும் ஓர் ஓர் அனுபவம் சித்திக்குமாயினும், அந்த அனுபவம் மயக்கமமைந் துள அனுபவமாதலின் உண்மையனுபவமாக மதிக்கப்படமாட்டாது.

இந்த உண்மையை அறிந்து அனுபவிக்கும் மெய்ஞ்ஞானமன்றி, உண்மையை அறியாமல் செய்யும் மூட விசுவாசம் எமக்கு முத்திப் பெரும்பயனை ஒருபோதும் தந்திடமாட்டாது. விசுவாசமும் அன்பும் எமக்கு வேண்டப் படுவனவாயினும், அவை உண்மையறிவின் பயனாக நிகழுதல் வேண்டும். அல்லாக்கால் அவைகள் மாயாமயக்கங்களேயாகி இடையில் அழிந்திடும்.

---

## திருக்குரக்குத்தளி

"கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா" என நம் சைவ சமய பரமாசார்ய மூர்த்திகளாம் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது அருமைத் திருவாக்கால் ஊர்த் தொகைத்திருப் பதிகத்தால் விதந்தோதியுள்ள வைப்புஸ்தலமானது மேற்குறித்துள்ள தேவாரத் திற் காணுமாறு கொங்குமண்டலத்துள் அடங்கிய 24 உட்பிரிவு நாடுகளுள் ஒன்றாகிய குறும்பு நாட்டின் கண் உள்ளதென நன்கு தெரி கிறது.

இந்தக் குரக்குத் தளி என்னும் திருத்தலம் ஈரோட்டினின்றும் கோயமுத்தூர் செல்லும் இருப்புப்பாதை வழியில் ஊளிபாளையம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே செல்லும் கற்சாலையில் முக்கால் மைல் சென்று நஞ்சராஜன் குளத்தினின்றும் ஓடும் கால்வாயின் கரையி லேயே 2 பர்லாங்கு தூரம் சென்று அடையத்தக்கது.

இச்சிவாலயத்திற்குக் கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் காஞ்சி நதியுடன் நள்ளாறு சங்கமமாகிறது. தெற்கில் 2 பர்லாங் தூரத்தில் காஞ்சிமா நதியும், மேற்கில் 2 பர்லாங்கு தூரத்தில் 100 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நஞ்சராயன் குளம் என்னும் பெரிய ஏறியும், வடக்கில் ஒரு பர்லாங்கு தூரத்தில் நள்ளாறு என்னும் நதியுமாக இவை மத்தியில் கழனிகளாற் சூழ்ந்து வளம்பெற்றுள்ளது.

இத்தலத்திற்கு இத்திருப்பெயர் வந்த காரணம்: குரங்கு + தளி குரக்குத்தளி என வலித்தல் விவகாரம் பெற்றது. இது சுக்கிரீபனால்

பிரதிஷ்டிக்கப்பெற்ற சிவலிங்கப் பெருமானை உடையது. சுக்கிரீபேச்சுரர் என்னுந் திருநாமமும் இறைவற்கு வழங்கி வருகிறது. வானரம் சிவலிங்கப் பெருமானை அர்ச்சிக்கும் பாவனையாக இவ்வாலயத்தின் முகப்பில் சித்திரித்திருத்தலினாலும், திருக்குரக்குத்தளி என்னுந் திருநாமத்தை இவ்வாலயத்துப் பல சிலா சாசனங்களாலும் நன்குகாணலாம்.

இத்தலத்துள்ள சிவாலயம் மிக்க அழகிய சிற்ப வேலைகள் அமைந்து கண்டோர் வியந்து களிகூறும் வண்ணம் விளங்கும் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், அரங்கமண்டபங்களை யுடையதாய் மிகப் பூர்வீக ஆலயமென நன்கு தெரிகிறது. இவ்வாலயத்துச் சிற்ப வேலையின் பெருமையை இந்நாட்டில் கல் வேலை செய்யும் சிற்பிகள் பேரூர், பெரிய பாளையம் (இது தற்கால வழக்கப் பெயர், இதுவே குரக்குத்தளி) தாடிக்கொம்பு, தாரமங்கலம், ஆகிய இவ்வாலயத்துச் சிற்பங்களைத் தவிர்த்து மற்றைய ஆலயங்கள் போல் வேலை செய்கிறோமெனத் தாம் பூலம் பெற்றுச் செய்யும் வழக்கமும் தொன்றுதொட்டு நன்கு தெரிவித்து வருகிறது.

15 வருஷங்களுக்கு முன்னர் இத்தலத்திற்கு அருகிலுள்ள வாவிப்பாளையம் குப்புசாமிக் கவுண்டர் என்பவர் இத்தலம் மைசூர்ச் சமஸ்தானத்தாராற் பரிபாலிக்கப் பெற்று வந்ததெனத் தெரிந்து மனுச் செய்து கொண்டதன் பிறகு அங்கிருந்து ஓரதிகாரி வந்து ஆலயத்துச் சிலாசாசனங்களைப் பிரதி செய்துகொண்டுபோய்ப் பின்னர் 800 ரூபாய்கள் அவர்களால் அனுப்பப் பெற்று ஷை குப்புச்சாமிக் கவுண்டர் முன்னின்று, விதானம் ஒழுகாவண்ணம் கற்களுஞ் சுண்ணம்புங் கலந்து நன்கு அடித்தும், தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தைச் சீர்பெறவும் செய்தனர்.

அம்பிகையின் விக்ரகத்தை அந்தோ நெடுநாள் முன்னரே கள்வர்கள் உடைத்து வீழ்த்தினர். இப்பெருஞ் சிவபுண்ணியத்தை முன்னின்று முடிக்கும் புண்ணிய சீலர்களைக் காண்கிலோம்.

பெருமான் ஆலயத்தின்றிருக்கதவம் மிகக் கிலமாயிருந்ததனைச் சிவநேயச் செல்வராகிய திருப்பூர் மளிகை முத்துசாமி செட்டியாரவர்கள் நன்கு புதிப்பித்து வைத்தும், ஆலயத்தினுள் தீர்த்தக்கிணறு ஒன்று வெட்டுவித்துத் திருநந்தவனமும் செய்து தமது கரத்தாலேயே தண்ணீர் சேந்தி ஊற்றியும் புண்ணியம் பெற்றுச் சிவபிரான் திருவடி நீழல் சேர்ந்தார்.

ஊற்றுக்குழி அளகிரி செட்டியார் என்னும் அன்பர் அருமையான மடைப்பள்ளி ஒன்று கட்டுவித்தார். மேற்குறித்த இவ்விரண்டு திருப்பணிகளும் 10-வருடங்களுக்குள் நிறைவேறின.

இச்சிவாலயத்தில் நிலவறை யொன்றிருப்பது பலருக்கும் நன்கு தெரிந்ததே. ஆயினும் உட்சென்று கண்டார் ஒருவரும் இன்று. இஃதிவ்வாறுக இவ்வாலயத்து அர்ச்சகராகிய ஆதிசைவ சிகாமணி ஸ்ரீ சுப்பிரமணியக் குருக்களவர்கள் பன்னெடு நாளாய்ப் பரனைப் பூஜித்துவந்த பெரும்பேற்றால் சென்ற மார்கழிமீ ஆருத்ரா தரிசனத்தின் முந்தியநாளிரவில் தடங்கருணைப் பெருங்கடலாம் சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, அன்ப; உலகம் உய்ய நாளை நாம் தரிசனம் காட்டுகின்றேம் என்று திருவாய்மலர்ந்து மறைந்தருள, அப்பொழுதே எழுந்து திருவருளை வியந்து துதித்து, அடுத்துள்ள பெரியபாளையஞ் சென்று பல மனிதர்களை எழுப்பிக்கொண்டு அந்நிலவறையைச் சோதிக்க எண்ணங்கொண்டு தீவர்த்திகள் கொளுத்திக்கொண்டு உள்ளிறங்கி நோக்குங்கால் ஜோதிவடிவாகிய திருக்கோலத்துடன் ஸ்ரீமத் நடராஜப் பெருமானைத் தரிசித்து எடுத்துக்கொண்டு பின்னருந் தேடுகையில் ஸ்ரீ சிவகாமவல்லியின் திருவுருவத்தையும், மகா கணபதியின் திருவுருவத்தையுங் காணப்பெற்று ஆலயத்தில் எழுந்தருளச்செய்து அன்று ஆருத்ரா தரிசனமாதலின் திருப்பூர் வாசிகளில் பல சிவநேயச் செல்வர்கள் கேள்வியுற்று வந்து அபிஷேகாராதனைகள் ஒழுங்குபெற நடாத்திப் பெருமானை அம்பிகையுடனும், மூத்தபிள்ளையாருடனும் உற்சவங் கொண்டாடி ஊனடைந்த உடம்பின் பிறவிப் பயனைப்பெற்று உய்ந்தனர்.

பின்னர் எண்ணிக்கையில்லாத பல அன்பர்கள் வந்து வந்து தரிசித்துக் கண்பெற்ற பேறுபெற்றுச் சென்றுகொண் டிருக்கின்றனர்.

பின்னர் அரசாங்கத்தார் வந்து நேரில் இருந்துகொண்டு அந்நிலவறையைச் சோதிக்குங்கால் சோமாஸ்கந்த மூர்த்தத்திலுள்ள அம்பிகையும் ஸ்கந்தருமில்லாத தனி மூர்த்தியும், உமாமகேஸ்வர மூர்த்தியும், ஓர் காளியின் விக்கிரகமும் கிடைக்கப்பெற்று எடுத்தனர்.

முன் நடராஜ மூர்த்தியுடன் காணப்பெற்ற சிவகாமவல்லியின் திருவடிக் கீழ்ப் பீடத்தில் திருக்குரக்குத்தளி நாதருக்கு முத்துக்குமார காங்கேய ராஜா உபயம் எனச் செதுக்கியிருக்கிறது. நடராஜ மூர்த்தியின் திருக்கோலம் யாவருங் கண்டு வியக்கத்தக்க பெரிய திருக்கோலம். இவருக்கு முறையே ஆறபிஷேகங்களும் நன்கு நடைபெறுகின்றன வெனத் தெரிந்து மகிழ்வடைந்தேன்.

இவ்வாலயத்திற்குப் பல மான்ய பூமிகள் இருந்தனவென இங்குள்ள சிலாசாசனங்களால் தெரியவருகிறது.

அவற்றுள் கலி 1425-ல் ஒன்னக்களஞ் செட்டியார் என்பவர் தமது மகளுக்குச் சீதனமாகக் கொடுத்த பூமியை அப்பெண்மணி தனக்குப் புத்திரப் பேறில்லாக் காரணத்தால் இறைவற்கு விடுத்த விபரங்காட்டும் ஓர் சிலாசாசனம் அப்பூமியின் நான்கு எல்லையளவுகளுடன் நன்கு காண ஆலயத்தின் தென்பாகத்தில் நின்று நிலவுகிறது. அப்புண்ணியவதியின் வயலில் விளையும் நெல்லே இறைவற்கு நிவேதனத்திற்குத் தற்காலம் உதவுகிறது. ஷ சாசனத்தின் பிரதியை இன்னொருமுறை வெளியிடுகிறேன்.

கிலமாயுள்ள இவ்வாலயத் திருப்பணிபுரியச் சிவபக்தியும் பெருஞ் செல்வமும் வாய்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் முன்வருவார்களேல் சைவ உலகம் களிகூர்ந்து உய்வதுடன் தாங்களும் மீண்டுவாரா வழியருள் புரிபவனை அடைவர்களென்பது குன்றின்மேலிட்ட விளக்கேயாம்.

"சைவபரிபாலனப் பத்திரிகை"

த. குமாரசாமி.

---

## சூரியமண்டல வழிபாடு

"ஞானசித்தி"

வேத முதலிய கலைகளை ஆதாரமாகக் கொண்ட சைவ வைஷ்ணவ ஸ்மார்த்த மத்துவமதப் பிரிவுபட்ட நம் இந்து சமயத்தவர் யாவரும் சந்தியாவந்தன முதலிய பல கிரியைகளில் எப்பொழுதும் சூரியமண்டலத்தை நோக்கியே தம் வழிபாடுகளைச் செலுத்துகிறார்கள். அவற்றுள்ளும் சந்தியாவந்தன கிரியையே எவர்க்கும் பிரதானமானது. அச்சந்தியா வந்தனத்தில் அருக்கிய முதலியன கொடுத்துச் சூரிய மண்டல மத்தியில் விளங்கும் தெய்வ சக்தியை மனத்தாற் பற்றி வழிபடுவது வழக்கம். அப்படி யாவரும் சூரியனிடத்தே தம் உபாசனையைச் செலுத்துவதின் நோக்கம் மிக அருமையும் பெருமையும் நுட்பமுமானது.

இந்தப் பூமண்டலம் சூரியமண்டலத்தின் கவர்ச்சியில் அமைந்திருக்கின்றது. அதிலுள்ள நமது தேகமும் சூரியமண்டல ஆகர்ஷணமுடையதே. சூரியமண்டலம் இப்பூமியை மட்டுமன்று. தன்னைச் சூழ்ந்து நாற்றிசைகளினுமுள்ள பல மண்டலங்களைக் கவர்ச்சியினால்

இழுத்து நிற்கும். பூமியின் அணுக்களினும் சூரியமண்டலத்திலுள்ள அணுக்கள் வலியுடையன. அது பற்றியே பூமியை ஆகருஷிக்குந் தன்மை சூரிய மண்டலத்திலிருக்கின்றது.

இனிச் சூரியன் மற்றை மண்டலங்களிலுள்ள அணுக்களைத் தான் இழுப்பதும் தன்னிடத்துள்ள அணுக்களை அந்நிய மண்டலங்களுக்கு விடுவதும் ஆகிய இயல்புள்ளதாகும். பூத அணுக்களைக் கவர்தல் போலவே சீவ அணுக்களையும் கவர்ந்து தன்னிடத்து வைத்தலும் பிற மண்டலங்களுக்கு விடுதலுஞ் செய்யும். சூரியனில் மாத்திர மன்று, சந்திரனிலும் இந்தக் குணம் இருக்கின்றது.

ஒருவனுடைய சீவ அணு இந்தத் தூலதேகத்தை விட்டு நீங்கிய வுடனே சூக்குமசரீரியாய் எழுந்து சந்திர மண்டலத்தையாவது சூரிய மண்டலத்தையாவது அடையும். சூக்கும சரீரமாவது தூலசரீரத் துக்குக் காரணமானது. அதாவது மரம் உண்டாவதற்கு விதை காரணமாயிருத்தல்போலத் தூலசரீரம் உண்டாதற்குச் சூக்குமசரீரங் காரணமாயிருக்கும். சூக்கும சரீரம் சூக்கும பூதங்களும் மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும் சேர்ந்து உண்டாவது. விதையின் கணுள்ள சூக்குமமான ஒரு சீவசக்தி சூக்கும அணுவைப் பற்றி நிற்க அவ்வணு தூலபூதங்களை ஈர்த்துத் தொகுத்துத் தூல சரீரமாய் வளர்ந்து மரமாதல் காண்கின்றேம். அதுபோலவே மனித னுடைய சரீரமும் தூலமாயிருப்பதால் அது ஒரு சூக்கும சரீரத்தி லிருந்தே யுண்டாவதென்று அறியவேண்டும். அந்தச் சூக்கும பூதங் களாலாகிய சூக்கும சரீரம் சூரிய மண்டலத்திலும் சந்திர மண்டலத் திலும் வெவ்வேறு விதமாய் விளங்குகின்ற கிரகங்கள் நட்சத்திரங் களின் மண்டலங்களிலும் சென்று பிறப்படைவதாயிருக்கும். அதற் குக் காரணம் அம்மண்டலங்களின் ஆகர்ஷணமும் மனேசங்கற்பமு மாம். அந்த ஆகர்ஷணத்துக்கும் மனேசங்கற்பத்துக்கும் காரணமாய் நிற்பது அவரவர் செய்த கன்மமேயாம்.

சூக்கும வுடம்போடு கூடிய சீவன் உடலைவிட்டு நீங்கினவுடனே அச்சமயம் பகற்காலமாயின், பூமியோடு தொடர்புடைத்தாயிருக்கும் சூரியனல் அவனுடைய அந்தச் சூக்குமவுடம்பு ஆகருஷிக்கப்பட்டுச் சூரிய மண்டலத்தையடையும். இராக்காலமாயின், அப்படிச் சூரிய னல் ஆகருஷிக்கப்படமாட்டாது. இனிச் சூரியனல் ஆகருஷிக்கப் பட்ட சீவன் அம்மண்டலத்திலிருந்து மேன்மேலுள்ள பல மண்டலங் களையடையும். அம்மண்டலங்கள் சுவர்க்காதி பரலோகங்களாதலால், அப்பரலோக வாழ்வை யடைவது சீவனுக்கு இன்பாநுபவத்துக்கு

எதுவாகின்றது. அப்படிச் சூரியலோக மார்க்கமாகச் சென்று சுவர்க் காதிகளை அடையாதவுயிர்கள் சந்திரமண்டலத்தை யடைந்து அங்கு நின்றும் பூமிக்கே வந்து பலவிதமான சனனங்களை யடைகின்றன. சூரிய லோகத்தையாவது சந்திர மண்டலத்தையாவது அடையாமல் ஆகாயத்தினின்று தவறிய சில சீவர்கள் கீழுள்ள நரக லோகங்களையும் அடைகின்றன. அப்படி அவை தவறுதற்குக் காரணம் அவற்றின் கன்மமேயாம். இவ்வாறு சீவர்கள் தேகத்தை விட்டவுடனே மேல் கீழ் நடுவென்னும் மூன்றிடத்துச் செல்லும் நிலையுடையனவாயிருத்த லால், இப்பூமியையாவது கீழுள்ள நரகங்களையாவது அடையாமல் மேலுள்ள சுவர்க்காதிகளை அடைய முயல்வது எவர்க்கும் விவேகமாம். அச்சுவர்க்காதிகளை அடைதற்கு மார்க்கம் சூரிய மண்டலப் பிர வேசமேயாம்.

அந்தச் சூரிய மண்டலத்தை அடையும் நிமித்தமாகவே சந்தியா வந்தன முதலிய கிரியைகளில் சந்தியா காலங்களில் சூரிய மண்டல வழி பாடு செய்யப்படுகின்றது. சூரிய மண்டலத்தில் ஈசுர சக்தி தங்கி நின்று எல்லா மண்டலங்களையும் இயக்குவதால் அந்த ஈசுர சத்தி தம்மோடு தொடர்பு பட்டுத் தம்மிற் பதிந்து தம்மையும் இயக்கி அச் சூரிய மண்டலத்தில் ஈர்க்குமாறும் அங்கிருந்து சுவர்க்காதிகளிற் செலுத்துமாறும் அவ்வீசுர சக்தியைத் தியானிப்பது அவசியமாகின் றது. எப்பொழுதும் பரமேசுரனைச் சூரிய மண்டல மத்தியிலிருப்ப வராகப் பாவித்து அவரை வணங்கி அவருடைய பாதத்தை யடைய வேண்டுமென்று சிந்தித்து வருபவன் தன்னுடைய மன அன்பைச் சூரிய மண்டலத்திற் செலுத்துபவனாகிறான். அவனுடைய மனம் சூரிய மண்டலத்தை யடைய வேண்டுமென்னும் விருப்பத்தோடேயே யிருக் கும். இப்படித் தினந்தோறும் மனத்தைச் செலுத்தி வந்தவன் அவ் விருப்பப்படி மரணாந்தத்தில் அம்மனம் ஈர்த்துச் செல்லச் சூக்கும தேகத்தோடு சூரிய மண்டலத்தையே யடைகின்றான். அது எவ்வா றெனில், நாம் ஒரு காரிய நிமித்தமாக ஒருவருக்கு அல்லது ஓரிடத்துக் குச் செல்ல வேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அம்மன நினை வின்படி உடம்பு எழக் கால் நடந்து சென்று நினைந்த இடத்தை அடை கின்றது. இன்னது செய்யவேண்டுமென்று மனம் நினைத்தவுடனே கை முதலியன அவ்வாறே செய்கின்றன. மன நினைவின்படியே உடம்பு முழுவதும் தொழிற்படுகின்றது. அவ்வண்ணமே சூரிய மண்டலத் தைத் தியானித்து அதையடைய வேண்டுமென்று எண்ணிய மன முடையோன் இறந்த காலத்தும் அம்மனத்தினாற் செலுத்தப்படுகின்ற

சூக்குமவுடம்போடு எண்ணிய அம்மண்டலத்தைச் சென்றடைகின்றான். இன்னும் கர்ம பேதங்களிருக்குமானால் அம்மண்டலத்திலிருந்து சுவர்க்க பேதவுலகங்களைச் சார்கின்றான். இதனால் நரக லோகங்களை யடையாமல் நீங்குவதும் சுவர்க்காதிகளை யடைவதுமாகிய இரண்டு செயல் இருக்கின்றது. இப்பூமண்டலத்துள்ள உயிர் இறந்தவுடனே ஏதேனுமொரு உலகத்தை யடைதல் நிச்சயம். அப்படி யடைதலில் சூரிய மண்டல வாயிலாக மேலுலகங்களை யடைதலே சூரிய மண்டலத்தை நோக்கிச் செய்யும் வழிபாட்டின் நோக்கமாம். சூரிய மண்டல ஆகர்ஷணமும் மனத்தின் நினைவுக்கு ஒத்து வருதலால், சூரிய மண்டல வழிபாடு செய்தோர் அதனை அடைதலில் யாதும் ஆசங்கையில்லை. ஓரிடம் போக வேண்டுமென்று மனம் நினைக்க உடம்பு வேறோரிடம் போவதை உலகிற் கண்டவரில்லை. மன நினைவின்படியே உடல் போகக் காண்கின்றோம். அதனால் எப்பொழுதும் சூரிய மண்டலம் போதலையே சிந்தித்தோன் அதனையடைவது திண்ணமாமென்க.

---

## சைவர்கள் வணங்குந் தெய்வம்

### "ஞானசித்தி"

சிலர் சைவ சமயிகள் பல தெய்வ வணக்கக்காரர் என்று இகழுகிறார்கள். சைவ சமயிகள் சிவம் ஒன்றே பரம்பொருளென்றும் ஏனையவெல்லாம் அவருடைய அடிமையும் உடைமையுமாகிய பொருள்களென்றும் கொண்டு, பரம்பொருளாகிய சிவமொன்றையே வணங்குந் தன்மையுடையவர்கள். சிவத்துக்கு மேற்பட்டாவது சமமாயாவது வேறும் ஒரு கடவுள் இருப்பதாக ஒப்புக்கொள்வதில்லை. உலகத்துக்குக் கர்த்தாக்களாக அநேகர் உளரென்று கொள்ளுஞ் சமயமும் ஒன்றுண்டு. அது சைவசமயமன்று. அநேகசுரவாத மதமென்று சொல்லப்படும். அந்த அநேகசுரவாதமதம் சைவ சமய நூல்களாலே கண்டிக்கப்படுவது. கர்த்தாக்கள் அநேகருளரென்பதை மறுத்துச் சிவம் ஒன்றே பதிப்பொருளென்று நாட்டுவது சைவசமயக் கொள்கை.

இனி முப்பத்துமுக்கோடி தேவர்கள் உளரென்று சைவசமயம் சொல்லுகின்றதே; அதனால் பல தேவர்கள் உளரென்று ஏற்படவில்லையோ வெனின், தேவர்களாவார் சுவர்க்கம் என்னும் ஓர் உலகத்தில் முன் செய்த புண்ணியவசத்தாற் பிறந்து இன்பம் அநுபவிக்கும் ஒருவகைச் சாதியினர். அவர்கள் உயிர் வர்க்கத்தவரன்றிக் கடவுட்டன்மை யுடையவரல்லர். உயிர்கள் தாம் தாம் செய்த நல்வினை தீவினை

களுக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களை யடையுமென்றும் வினை நீங்குமளவும் இப்பிறப்பு மாறி மாறி வருமென்றும் சைவ நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் எழுவகைப் பிறப்பு, தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவாம். இவ்வெழு வகையுள் முதலில் வைத்து எண்ணப்படுவது தேவசாதி. அவர்களது தொகை முப்பத்துமூன்று கோடி. அவர்கள் மூன்பு மனிதராய்ப் பிறந்திருந்து சுவர்க்க பதவிக்கேற்ற புண்ணியங்களைச் செய்து இறந்தபின் அப்புண்ணியப் பயனால் தேவ பதவியை யடைந்திருப்பவர். அப்புண்ணியம் இருக்குமளவும் சுவர்க்கத்தே தேவராயிருப்பர். புண்ணியப் பயன் அனுபவித்து ஒழிந்தவுடனே மறுபடியும் எஞ்சிய கன்மங்களுக்கு ஈடாக வேறு வேறு பிறவியை யடைவர். அதனால் அவர் உயிர்வர்க்கத்தவரென்பது இனிது விளங்கும். இங்ஙனமாக, விவேக சூனியர்களாயுள்ள சிலர் அத்தேவர்களையும் சேர்த்து உலக காரண கர்த்தாவான சிவனைமாத்திரமன்று, முப்பத்துமுக்கோடி கடவுளரைச் சைவர்கள் கொள்ளுகிறார்களென்று தூற்றுகின்றார்கள். இது அறியாமையன்றோ. மனிதராகிய நாம் எப்படி உயிர் எனப் படுகின்றோமோ அப்படியே தேவர்களாகிய அவர்களும் உயிர்களாய்ப் பிறந்திறக்குமியல்புடையோராய் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பாசங்களாற் பந்திக்கப்பட்டோராய்ச் சிவமாகிய கடவுளை வழிபட்டு மும்மல பந்தத்தினீங்கி மோட்சம் புகவேண்டியவர்களா யிருக்கின்றனர். ஆதலால், இவ்வுண்மையறியாது கடவுட்டன்மையுடையோராய் வைத்து இவரையும் வணங்குகிறார்களென்று சைவர்கள் மேல் ஏற்றுந் தூஷணம் அவர்களது அறியாமையை விளக்குமே யன்றிச் சைவ சமயத்தைச் சார்ந்து சைவ சமயத்துக்கு ஒரு குறையை யுண்டாக்க மாட்டாது. இது நிற்க.

பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளைச் சைவர்கள் வணங்கவில்லையா, கடவுள் ஒருவரேயாக, மூவரைக் கடவுளராக வணங்கலாமோ வெனின், இதுவும் சைவ சமயக் கொள்கை இதுவென்று அறியாமையினால் வினவும் வினாவாம். என்னை? சிவம் ஒன்றே பரம்பொருளென்பதும் ஏனைய வெல்லாம் உயிர்வர்க்கமென்பதும் சைவ சமயக் கொள்கையாமென்று முன்பே சொல்லிவிட்டோம்.

பிரமாவைப் பதியென்று கொள்வது சைவ சமயக் கருத்தன்று. பிரமா உயிர் வர்க்கத்துட்பட்டவர். உயிர்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர். ஆணவம், கன்மம், மாயை என்

னும் மும்மலமுடையோர் சகலர். ஆணவம் கன்மம் என்னும் இருமல முடையோர் பிரளயாகலர். ஆணவமாகிய ஒரு மலமுடையோர் விஞ் ஞானகலர்.

இம்மூவகை யுயிர்வர்க்கத்துள் மும்மலமுடைய சகலரில் ஒருவராயுள்ளவரே பிரமா. இவரது தொழில் படைப்பு. இத்தொழிலும் பிரமபதமும் புண்ணியப் பயனல் வருவது. எவர் அதற்குரிய புண்ணியஞ் செய்தனரோ அவர் அந்தப் பதவியை யடைவர். அப்புண்ணியம் அநுபவித்தொழிந்த காலத்து அப்பதமும் அவர்க்கு இல்லாதொழியும். ஒருவர் அப்பதத்தை விட்டகல மற்றொருவர் அப்பதத்தை யடைவர். மனிதருடைய கால அளவில் இரண்டாயிரஞ் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒரு நாளாகும். இப்படி முந்நூற்றறுபத்தைந்து நாள் ஒரு வருடம். இப்படி நூறு வருடம் கொண்டது பிரமாவுடைய ஆயுள். அந்த ஆயுள் முடிவிலே பிரமா இறந்துவிடுவர். பின்பு அப்பதத்துக்குரிய புண்ணியமுடைய வேறோருயிர் பிரமாவாய் வருவர். இப்படி எண்ணில்லாத பிரமர்கள் தோன்றியழிவார்கள். அன்றி இப்பிருதிவி தத்துவத்தில் இவ்வண்டத்தைப் போல ஆயிரங்கோடி யண்டங்கள் உளவென்றும், இவ்வண்டத்திலிருப்பதுபோல ஒவ்வோரண்டத்திலும் ஒவ்வொரு பிரமாவாக ஆயிரங்கோடி யண்டத்திலும் ஆயிரங்கோடி பிரமர்கள் உளரென்றும் நூல்கள் கூறுகின்றன. இப்பிரமாவின் இயல்பு எப்படியோ அப்படியே அவர்கள் இயல்புகளுமாம். ஆதலால், இருவினை வயப்பட்டுப் பிறந்திறந்துழலும் நீர்மையுடைய பசுவர்க்கத்துள் வைத்து எண்ணப்படும் பிரமாவைப் பதியென்பார் யாருமிலர்.

இனி விஷ்ணுவும் சகல வர்க்கத்துட்பட்டு அப்பதமடைந்தவரேயாம். அவரியல்பும் பிரமாவினியல்பு போன்றதேயாம். ஒரு விஷ்ணுவின் ஆயுளுள்ளே அநேக பிரமர்கள் தோன்றி யழிவார்கள். அதனல் விஷ்ணுவின் ஆயுள் பிரம ஆயுளைவிட அதிகமானது. அதிகாரத்தானும் விஷ்ணு பிரமாவுக்கு மேற்பட்டவராவர். இதுவே பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் உள்ள பேதமாம்.

(இன்னும் வரும்.)

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இவைதச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக் கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வரு பவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்பு வோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

இ. கண்ணப்ப முதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

## தேவகோட்டை

## மெ. அரு. நா. சைவசித்தாந்த வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையில் மாணவர்களுக்கு சைவ சித்தாந்தக் கல்வி பயிற்றுவிக்கப் பெறுகிறது. இப்பொழுது சில மாணவர்கள் தாம் கற்க எண்ணிய நூல்கள் கற்று முடிந்தமையால் தமதிருப்பிடம் சென்றிருக்கின்றனர். புதிதாகச் சில மாணவர்களைச் சேர்ப்பதற்கு இட மிருக்கிறபடியால் சித்தாந்த சாத்திரம் பயில விரும்புவோர் தம்முடைய ஊர், பேர், முதலியவற்றையும் தாம் இதுவரை படித்திருக்கும் நூல் களையும் கண்டு ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதஞ் செட்டியார் அவர்கட்குத் தெரிவித்து அவர்கள் அநுமதியின்பேரில் சேர்ந்து படிக்கலாம். வருபவர் சுத்தபோஜனமும் சிவதீக்ஷையும் உடையரா யிருத்தல் வேண்டும்.

இங்ஙனம்:
போ. முத்தைய பிள்ளை.

# தமிழகம்.

## (வாரம் இருமுறைப் பதிப்பு)

மலாய் நாட்டிற்கு தலைமைத் தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள், வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங், சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய தொடுவாய்ப் பகுதிகளிலும், ஐக்கிய மலாய் நாடுகளிலும், சைகோன், சுமாத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், பிஜி முதலிய கீழ் தேசப்பகுதிகளிலும் குடியேறியிருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இஃது மலாய்நாடு, பிரஞ்சு, கொச்சின் சீன, நெதர்லாண்டு இண்டீஸ், போர்னியோ, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா, கீழ்தேசப் பகுதிகளுக்கு வெள்ளி 10.00, ஆறு மாதத்திற்கு வெள்ளி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை, நேட்டால், கென்யா முதலிய மேல் நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 15. ஆறு மாதங்களுக்கு ரூபா 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:— "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்துரோட்டு, கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்.

---

# அறிவிப்பு

"சிவார்ச்சன சந்திரிகை" என்னும் பெயருடைய நூல் ஒன்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்களாலே செய்யப்பட்டு இதுவரை அச்சில் வராமலிருந்தது. அதனை இப்பொழுது நம்முடைய சங்கத்திலிருந்து நாகரலிபியில் அச்சிட்டிருக்கிறோம். இதில் ஆத்மார்த்த பூசைக்குரிய எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கலிக்கோ பயிண்டு | ... ... | ரூ. 1—4—0 |
| சாதாரண பயிண்டு | ... ... | ரூ. 1—0—0 |

தபாற் சார்ஜ் வேறு

இங்ஙனம்:
காரியதரிசி,
சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை.

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.